Australian cricketer Mr. Mathew Hayden at Velammal College, Madurai



**Matthew Hayden AM**
@HaydosTweets

It's all happening down in Madurai....oh yer feeling the #magizhchi @TNPremierLeague



09/08/16, 3:20 PM

## மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரியில்

# மாணவர்களுடன் 'செல்பி' எடுத்து அசத்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்

**மதுரை**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மேத்யூ ஹைடன் நேற்று தமிழ் பாரம்பரிய முறைப்படி வேட்டி, சட்டை அணிந்து வந்து மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வந்தார்.

சென்னை உட்பட 3 இடங்களில் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டிகளை ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மேத்யூ ஹைடன் தொடங்கி வைக்கிறார்.

இதை யொட்டி நேற்று மதுரை வந்தார். மீனாட்சி அம்மன் கோயிலிலுக்கு சென்ற அவர் அங்கு அம்மன், சுவாமி சன்னதியில் தரிசனம் செய்து விட்டு, கோயில் பிரகார ங்களை சுற்றிப் பார்த்தார். 30 நிமிடங்களுக்குப் பின், கிழக்கு கோபுர வாசல் வழியாக வெளியே வந்தார்.

அவர் பாரம்பரிய முறையில் வேட்டி, வெள்ளை நிற சட்டை அணிந்து அசத்தினார். இவரது வருகையை அறிந்த கிரிக்கெட் ரசிகர்கள் ஏராளமானோர் அங்கு திரண்டனர்.



மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுடன் 'செல்பி' எடுக்கும் ஆஸ்திரே கிரிக்கெட் வீரர் மேத்யு ஹைடன்.

செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், தமிழகத்தில் பிரிமி யர் லீக் கிரிக்கெட் போட்டியை ஊக்குவிக்கும் வகையில் இங்கு வந்துள்ளேன்.

சென்னை, நத்தம், நெல்லை ஆகிய இடங்களில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் தொடர்களை தொடங்கி வைக்கிறேன். மதுரை வந்ததிலும், மீனா ட்சி அம்மன் கோயிலில் தரிசனம் செய்ததிலும் மிக்க மகிழ்ச் சியாக உள்ளது என்றார்.

இதைத்தொடர்ந்து மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி, வேலம்மாள் பொறியியல் கல்லூரி, மதுரை கிரிக்கெட் சங் நிகழ்ச்சிகளில் பங்கேற்றா மதுரை சின்ன சொக்கிகுளத்தி உள்ள விஷால் டி மகாலி கலந்துரையாடலிலும் அவ பங்கேற்றார். அப்போது மதுரை கிரிக்கெட் சங்க நிர்வாகிக உடனிருந்தனர்.